# கலிபோர்னியா வாக்காளர்களுக்கான மொழி உதவி

நவம்பர் 2020 –யில் வாக்களிப்பதற்காக நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டிய அனைத்தும் தமிழில்

ASIAN AMERICANS ADVANCING JUSTICE ASIAN LAW CAUCUS

---

**சிறிய உதவிக்குறிப்பு!**

**உங்கள் விருப்ப மொழியைப் புதுப்பிக்க https://voterstatus.sos.ca.gov என்ற வலைத்தளத்தைப் பார்க்கவும் அல்லது உங்கள் தேர்தல் அலுவலகத்தைத் தொடர்புகொள்ளவும். உங்கள் பகுதிக்கான மொழிபெயர்க்கப்பட்ட பொருட்கள் இருந்தால், அதனை அவர்கள் உங்களுக்கு இலவசமாக அனுப்புவார்கள்.**

---

நீங்கள் இந்த மாவட்டங்களில் ஒன்றில் வாசிக்கிறீர்கள் என்றால்:

| | |
|---|---|
| காண்ட்ரா காஸ்டா (Contra Costa)<br>(925) 335-7800 | சாண்டா க்ளாரா (Santa Clara)<br>(408) 299-8683 அல்லது<br>(866) 430-8683 |

**நீங்கள் வீட்டிலிருந்து வாக்களிக்கிறீர்கள் என்றால்:** நீங்கள் எங்கே வாசிக்கிறீர்கள் என்பதன் அடிப்படையில், ஒரு தமிழ் "தொலைநகல்" வாக்குச்சீட்டை தபால் வழியாகப் பெறலாம். ஒரு தொலைநகல் வாக்குச்சீட்டு என்பது உங்கள் ஆங்கில வாக்குச்சீட்டைப் பூர்த்தி செய்வதற்கு உதவக்கூடிய ஒரு மொழிபெயர்க்கப்பட்ட மாதிரி வாக்குச்சீட்டாகும் (வாக்களிக்கக்கூடியது அல்ல). ஒரு தொலைநகல் வாக்குச்சீட்டைப் பெற உங்கள் மாவட்ட தேர்தல் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும் அல்லது உங்கள் விருப்ப மொழியை https://voterstatus.sos.ca.gov என்ற வலைத்தளத்தில் புதுப்பிக்கவும்.

**நீங்கள் நேரடியாகச் சென்று வாக்களிக்கிறீர்கள் என்றால்**: மொழி உதவியானது நீங்கள் வாக்களிக்கப் பதிவு செய்திருக்கும் இடத்தின் அடிப்படையில் கிடைக்கும். தமிழ் மொழி உதவி இருந்தால், ஒரு மொழிபெயர்க்கப்பட்ட குறி மற்றும் தெளிவாக-குறியிடப்பட்ட "தொலைநகல்" வாக்குச்சீட்டு இருக்கும். ஆங்கில வாக்குச்சீட்டில் வாக்களிப்பதற்கு உங்களுக்கு உதவ வாக்கச்சாவடிக்குள் எடுத்துச் செல்ல பிரதிகள் இருக்கும்.

**நேரடியாக வாக்களிக்கும்போது வாய்மொழி உதவியையும் நீங்கள் பயன்படுத்தலாம்**

உங்கள் வாக்குச்சாவடி அல்லது வாக்கு மையத்தில் தமிழ் பேசும் வாக்காள பணியாளர்கள் இருந்தால், அவர்கள் தாங்கள் பேசும் மொழிகளைத் தெரிவிக்கும் **ஒரு பாட்ஜ், ரிப்பன் அல்லது ஸ்டிக்கரை** அணிந்திருப்பார்கள். அங்கே எவரும் தமிழ் பேசுவார்களா என்பதைக் குறிக்கும் ஒரு அடையாளக்குறியும் அங்கே இருக்கும்.

**வாக்களிப்பு உதவிக்காக நீங்கள் இரண்டு நபர்கள் வரை** உங்களுடன் அழைத்துவர அனுமதிக்கப்படுவீர்கள், ஆனால் அவர்கள் உங்கள் ஊழியராகவோ அல்லது சங்கத்தைச் சார்ந்தவர்களாக இருக்கக்கூடாது. ஒரு குடும்ப உறுப்பினரையோ அல்லது நண்பரையோ அழைத்து வரவும்!

---

**நீங்கள் மேலே பட்டியலிடப்பட்டுள்ள மாவட்டங்களில் வசிக்கவில்லையென்றால், தமிழ் மொழி வாக்குச்சீட்டு மற்றும் உதவியைப் பெற முடியாது.**